# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்!



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து, கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்கர், ஒ.ஜோதி மற்றும் கோ.கண்ணன், ஆர்.ராஜசேகர் உட்பட பலர் உடன் உள்ளனர்.



சேலத்தில் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசிற்கு நிதி ஒதுக்காததைக் கண்டித்து தி.மு.க. சார்பில் கோட்டை மைதானத்தில் மாவட்டச் செயலாளர்கள் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. (சேலம் மத்தி) டி. எம். செல்வகணபதி எம்.பி. (சேலம் மேற்கு) எஸ். ஆர்.சிவலிங்கம் (சேலம் கிழக்கு) ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் வழக்கறிஞர் க.வைரமணி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் காடுவெட்டி ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் சுமார் 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் எம்.எல்.ஏ.க்கள் ஸ்டாலின் குமார் பழனியாண்டி கதிரவன், மேயர் அன்பழகன், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் முத்துச்செல்வம், விஜய் ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் காஜாமலை, விஜி டோல் கேட் சுப்பிரமணி, சேர்மன், துரைராஜ், மாத்தூர், கருப்பையா, தர்மன், ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ஆனந்த், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்த், செவந்தி லிங்கம், மண்டி சேகர், மோகன்தாஸ், ராம்குமார், நாகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு. க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட திமுக சார்பில், ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில், நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமலும், அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்து அளிக்காமலும், மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்ளும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கரூர் தலைமை தபால் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர். வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி நடைபெற்றது. குளித்தலை எம்.எல்.ஏ. இரா. மாணிக்கம், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. பி.ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ. க.சிவகாமசுந்தரி, மாவட்டக் கழக நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி. பாரத் தலைமை வகித்தனர். மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார். மத்திய பகுதி பொறுப்பாளர் பி.ஜி.எஸ். குமார் நன்றி உரையாற்றினார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம்.வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த LPG டேங்கர் லாரி ஓட்டுநர் முருகன் என்பவர் கடந்த 16.07.2024 அன்று கர்நாடகா மாநிலம், சிரூரு பகுதியில் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்ததையடுத்து, அவரது மனைவி செவ்வந்தியிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையை கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு முன்னிலையில் வழங்கி, ஆறுதல் தெரிவித்தார்.இந்நிகழ்வில், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மரு.மாலதி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், ஊத்தங்கரை ஒன்றிய குழு தலைவர் உஷாராணி குமரேசன், ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கதிரவன், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் சாந்தமூர்த்தி , பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்

# வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 28 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 24 ஜூலை 2024 அன்று மக்களவையில், மீண்டும் பயன்படத் தக்க வகையிலான புஷ்பக் விமான ரக ராக்கெட்டுகளை தயாரிப்பதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சி முன்னேற்றம் கண்டுள்ளதா? என்றும், விண்வெளி ஆராய்ச்சியை நீண்ட கால வளர்ச்சிக்கு பயன்படத் தக்க வகையில் முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என்று ஒன்றிய அரசின் பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் மத்திய பணியாளர் நலத்துறை இணைஅமைச்சர்அளித்த பதில் வருமாறு:-

மீண்டும் பயன்படத் தக்க வகையிலான புஷ்பக் விமான ரக ராக்கெட்டுகளை வடிவமைப்பதன் மூலம், குறைந்த செலவிலும், நீடித்த வளர்ச்சியை உறுதிபடுத்துவதிலும், இந்திய விண்வெளி ஆராய்சி நிறுவனம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும், இதற்கான சோதனைமுயற்சிகள் இதுவரை மூன்று முறை நிகழ்த்தப்பட்டுள்ளதாகவும், செங்குத்தாக பயனிக்கும் வகையிலும், திரும்பவும் பூமிக்கு வந்து சேரும் வகையிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், எரிபொருளுக்கு தேவையான பிராண வாயுவை வளிமண்டலத்திருந்து எடுத்துக் கொள்ளும் அளவிற்கு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின்தொடர் முயற்சிகளால் விண்வெளி செலவினை குறைத்திட வும், நீண்ட கால வளர்ச்சிகான உறுதியும் வெகு விரைவில் கிட்டும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் அவர்கள் மக்களவையில், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

# அரியலூர் மாவட்டத்தில் - 7 புதிய அரசுப் பேருந்துகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜூலை 28 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், அரியலூர் அண்ணாசிலை அருகில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் சார்பில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலத்தின் மூலம் BS VI - 7 புதிய அரசு பேருந்துகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், போக்குவரத்துத்துறை, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், மாணாக்கர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் இன்றைய தினம், BS VI - 7 புதிய பேருந்துகளை தமீழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பேருந்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பயணம் மேற்கொண்டார்.

அதன்படி இப்புதிய 07 பேருந்துகள் தடம் எண்.508(F) அரியலூர் செந்துறை புறப்பட்டு விருத்தாச்சலம் வழியாக சென்னை மாதவரம் சென்றடையும், தடம் எண். 508(M) அரியலூரில் இருந்து புறப்பட்டு விருத்தாச்சலம் வழியாக சென்னை கிளாம்பாக்கம் சென்றடையும், தடம் எண்.537(A) அரியலூரில் இருந்து புறப்பட்டு திருச்சி வழியாக கோயம்புத்தூர் சென்றடையும், தடம் எண்.509(B) ஜெயங்கொண்டம் செந்துறை புறப்பட்டு விருத்தாச்சலம் வழியாக சென்னை மாதவரம் சென்றடையும், தடம் எண்.509(I) ஜெயங்கொண்டத்திலிருந்து புறப்பட்டு விருத்தாச்சலம் வழியாக சென்னை மாதவரம் சென்றடையும், தடம் எண். 509(A) ஜெயங்கொண்டம் தா.பழூர் புறப்பட்டு விருத்தாச்சலம் வழியாக சென்னை கிளாம்பாக்கம் சென்றடையும், தடம் எண்.531(E) சிதம்பரத்தில் இருந்து புறப்பட்டு ஜெயங்கொண்டம், திருச்சி வழியாக மதுரை சென்றடையும் வகையில் இன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட், கும்பகோணம் மேலாண் இயக்குநர் மகேந்திரகுமார், அரியலூர் நகர்மன்ற திருமதி. சாந்தி கலைவாணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட், திருச்சி மண்டலம் பொது மேலாளர் முத்துக்கிருஷ்ணன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய கழக செயலாளர்கள் இரா.கென்னடி, கோ.அறிவழகன், மா.அன்பழகன், ரெ.அசோக சக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், நகர செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், நகர் மன்ற துணைத் தலைவர் கலியமூர்த்தி,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.ராமராஜன், தங்க. எழில்மாறன், நகர துணை செயலாளர் உத்திராபதி, நகர கழக நிர்வாகிகள் மாலா. தமிழரசன், இராஜேந்திரன், குணா, மணிவண்ணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், தோ.மு.ச.நிர்வாகிகள் டி.சேகர், பி.வி. அன்பழகன், கொளஞ்சி, செல்வம்,கணேசன், முத்தையன்,மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனைப்படி சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக இளைஞரணி 45 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை கிழக்கு மாவட்ட பொருளாளர் ஆர்.வி. ஸ்ரீராம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அருண், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆவின் செல்வமணி, நகர மன்ற உறுப்பினர்கள் வேலுமணி மீனாட்சி, பிரபாவதி குமார், ராஜேந்திரன், மாதேஸ்வரன், பூக்கடை ராஜா, மற்றும் நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இந்நிகழ்வில், மாவட்ட துணைச்செயலாளர் கோட்டை அப்பாஸ்,கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் LPF தமிழ்செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.பி.கண்ணப்பன், ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் மகுடபதி, இரா.மணிகண்டன், மு.ம.ச.முருகன், ச.குப்புச்சாமி, ஆடிட்டர் சசிக்குமார், நோயல் செல்வம், சரஸ்வதி புஷ்பராஜ், ச.கார்த்திகேயன், பகுதி கழக செயலாளர்கள் எஸ்.எம்.சாமி, ஷேக் அப்துல்லா, மா.நாகராஜ், இரா.சேரலாதன், மார்க்கெட் எம். மனோகரன்,வி.ஐ.பதுருதீன்,கோவை லோகு, அஞ்சுகம் பழனியப்பன், வம.சண்முகசுந்தரம், கே.பாக்கியராஜ்,கே.எம்.ரவி, எ.எம். கிருஷ்ணராஜ், அணிகள் அமைப்பாளர்கள் இரா.தனபால், சிவப்பிரகாஷ், டெம்போ சிவா,கராத்தே அர்ஜுன்,ஆர்.கே.சுரேஷ்குமார்,நா.பாபு, வழக்கறிஞர் அன்புச் செழியன், சிஆர்.கனிமொழி, மருதமலை ராஜ்குமார்,அக்ரி பாலு, பூர்ணசந்திரன், வி.மணி, இலா.தேவசீலன், ஸ்ரீசத்யா கோவை தங்கம், எம்எம். சஞ்சய்குமார், டி.கண்ணன் மற்றும் அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.